
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலகுவழி மாதிரிப் பரீட்சை - 06

ஆசிரியர் : P.அம்பிகைபாகன்
இடம் : ACA, ஆசிரியரின் வீட்டில் குழு வகுப்புக்களில்

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

1. கீழுள்ள ஒலிம்பிக் இலட்சிணையில் உள்ள ஐந்து வட்டங்களும் குறித்து நிற்பது.



1. ஐந்து கண்டங்களின் ஒற்றுமையை 2. ஐந்து சமுத்திரங்களின் ஒற்றுமையை
3. ஒலிம்பிக் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும் என்பதை.
4. ஒன்றுமில்லை

2. இலங்கைப் பாரளுமன்றம் கூடும்போது வைக்கப்படும் செங்கோல் இலங்கைக்கு எந்த நாட்டினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது?
1. இந்தியா 2. சீனா 3. பிரித்தானியா 4. ஜப்பான்

3. வினாவில் தரப்படும் நான்கு பெயர்களில் இலங்கைத் தேசிய வீரர் அல்லாதவர் யார்?
1. சேர் பொன்னம்பலம் இராமநாதன் 2. கலாநிதி டி. பி. ஜயா
3. மகாத்மா காந்தி 4. அநகாரிக தர்மபால.

4. பல்வேறு வேலைகளை இலகுபடுத்துவதற்கு பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படும். அவற்றுள் குறடு, அரம் ஆகிய இரண்டையும் எதற்குப் பயன்படுத்தப்படும்?
1. ஆணி கழற்ற, கத்தி தீட்ட 2. சுரை இறுக்க, குழிகுடைய
3. இறுக்கமாகப் பிடிக்க, கத்திதீட்ட 4. கம்பி வெட்ட, பாரம்தூக்க

5. மண்ணெண்ணெய் உள்ள போத்தலில் நீரைக் கலந்தால் அவை காணப்படும் விதம் யாது?
1. மண்ணெண்ணெய் கீழும் நீர்மேலும் 2. நீர்கீழும் மண்ணெண்ணெய் மேலும்
3. இரண்டும் கலந்து ஒன்றாகிவிடும் 4. சரியான விடை கூறமுடியாது

6. நாய், புலி, பூனை போன்றன தமது குட்டியை வாயால் தூக்கிச்செல்ல கௌவுவது குட்டியின் எப்பகுதியை?
1. வாயை 2. காதை 3. கழுத்தை 4. தலையை

7. பச்சைக் கிளியின் சொண்டின் நிறம் யாது?
1. கறுப்பு 2. பச்சை 3. சிவப்பு 4. வெள்ளை

8. பல்லி முட்டையின் நிறம் யாது?
1. நீலம் 2. கறுப்பு 3. வெள்ளை 4. சிவப்பு

9. ஆம்10ஆம் வினாக்களில் ஐந்து நிகழ்வுகள் குறிப்பிட்டப்பட்டுள்ளன. இவை சரியான ஒழுங்கு வரிசையில் காணப்படவில்லை. இந்த நிகழ்வுகளை ஒழுங்குவரிசைப்படுத்தும் போது இரண்டாவது, நான்காவது இடங்களில் வரும் நிகழ்ச்சிகளைக் குறிக்கும் விடையின் கீழ்க்கிறிடுக.

9. ஒரு சிறுபிள்ளை காலையில் கல்விச்சுற்றுலா செல்வதற்கு ஆயத்தமான போது இடம்பெற்றவை.
A. காலைக்கடன்களை கழிக்கின்றான்.
B. தயாரான பயணப்பையை எடுத்துக் கொண்டு பெற்றோரிடமிருந்து விடைபெறுகிறான்.
C. அதிகாலையில் படுக்கையிலிருந்து எழுகின்றான்.
D. பல்துலக்கி, முகம் கழுவிக் குளிக்கின்றான்.
E. ஆடை அணிகள் அணிகின்றான்.
1. AB 2. BC 3. CD 4. AE

10. ஒரு மாணவன் பரீட்சை மண்டபத்தில் நடைபெற்றதை நண்பனுக்குக் கூறுகின்றான்.

A எனது சுட்டெண் குறிக்கப்பட்ட இருக்கையில் சென்று அமர்ந்தேன்.

B பரீட்சைத்தாள்களை கவனமாக வாசித்து விடையளித்தேன்.


C. காலை 7:30 க்கு பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தேன்.

D. காலையில் அப்பாவுடன் பாடசாலைக்குச் சென்றேன்.


E. சரியாக 8:00 மணிக்கு எமக்குரிய பரீட்சைத்தாள்களைத் தந்தார்கள்.

1. CE 2. DE 3. AE 4. BE

11. பின்வரும் நெய்யரியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்களுக்கு சமம்?



சதுரங்கள் (.....)




12. இவ்வுருவை சதுரமாக்குவதற்கு இவ்வுரு போன்ற எத்தனை உருக்களை இதனுடன் சேர்க்க வேண்டும்?

(.....)


13. இவ்வுருவின் நீளப்பக்கத்தின் நடுவில் நேர்கோடு கீறி இரு உருக்களாகப் பிரித்தால் தோன்றும் இரு வடிவங்களையும் எவ்வாறு அழைக்கலாம்?

(.....)



14. இவ்வுருவின் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதுக. (.....)

15. உருவில் உள்ள இம்முக்கோணியின் சுற்றளவு 45cm ஆகும். பக்கம் AB யின் நீளம் 10cm உம் பக்கம் BC யின் நீளம் 15cm உம் ஆகும். எனவே பக்கம் AC யின் நீளம் யாது?



(.....)

16 தொடக்கம் 20 வரையிலான வினாக்களில் ஐந்து சொற்கள் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டு சோடிச் சொற்கள் ஒத்த கருத்துக்களைக் கொண்டவை. ஒரு சொல் வித்தியாசமானது. அதனை இனங்கண்டு எதிரே இருக்கும் புள்ளிக்கோடுகளில் எழுதுக.

16. புலி, யானை, வேங்கை, பரி, குதிரை .....

17. அழகு, திங்கள், ஞாயிறு, சந்திரன், எழில் .....

18. மாதா, நிதி, பிதா, தாய், பணம் .....

19. பூமி, வையகம், இரவு, கறுப்பு, கங்குல் .....

20. கோபம், உவகை, துயரம், மகிழ்ச்சி, கவலை .....

பாடலை வாசிக்கவும்

வானும் கனல் சொரியும் – தரை
மண்ணும் கனல் எழுப்பும்
கானலினி நானி நடந்தேனி – நிழல்
காணும் விருப்பத்தினால்

சரியான விடையின் கீழ் கீறிடுக.

21. பாடலில் '**வானும் கனல் சொரியும்**' எனும் வாக்கியத்தின் கருத்தை நன்கு விளக்கும் விடையாது?
    1. வானிலிருந்து பெருமழை பொழிகின்றது.
    2. வானிலிருந்து சூரியவெப்பம் தாக்குகின்றது.
    3. வானிலிருந்து பனிக்குளிர் வாட்டுகின்றது.

22. பாடலில் '**மண்ணும் கனல் எழுப்பும்**' எனும் வாக்கியத்தின் கருத்தை நன்கு விளக்கும் விடையாது?
    1. நிலம் வெப்பத்தை கக்குகின்றது.
    2. மண் குளிர்ச்சியாக இருக்கின்றது.
    3. சூரியன் மண்ணுக்குள் புதைந்து விட்டது.

23. '**நான் நடந்தேன்**' எனும் வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

.....

பாடலை வாசிக்கவும்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

24. பாடலில் '**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**' எனும் வாக்கியத்தின் கருத்தை நன்கு விளக்கும் விடையாது?
    1. இறுக்கமான மனம் தேவை
    2. இளகிய மனம் தேவை
    3. துணிவுள்ள மனம் தேவை

25. பாடலில் '**எண்ணிய முடிதல் வேண்டும்**' எனும் வாக்கியத்தின் கருத்தை நன்கு விளக்கும் விடையாது?
    1. நல்லவை எல்லாம் நடக்கட்டும்.
    2. நினைத்தவை நடந்து முடியட்டும்.
    3. நினைக்காதவையும் நடந்து முடியட்டும்.

பாடசாலைக்கு செல்ல விரும்பாது தெருவோரச் சேற்றில் நின்று சேறடித்து விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவன் ஒருவனுக்கு நீர் கூறக்கூடிய மூன்று புத்திமதிகளை புள்ளிக்கோட்டில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இடம் பெற வேண்டும். அவ்வாக்கியங்களின் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக இருத்தல் வேண்டும்.)

26. .....

27. .....

28. .....

29. அடைப்பிலுள்ள எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களை பூரணப்படுத்துக.

ண, ல, ள, ன, ழ, ம, நூ. றை, ரை

1. க.....யான் 2. அடமா.....ம் 3. கொள்க.....ன் 4. த.....பதி

30. வினாவில் மூன்று உள்ளக விளையாட்டுக்களும் இரண்டு வெளியக விளையாட்டுக்களும் உள்ளன. வெளியக விளையாட்டுக்கள் இரண்டையும் தெரிவு செய்து கோடிடுக.

கரம், கிரிக்கெற், டெனிஸ், செஸ், ஹொக்கி

31. வினாவில் மூன்று நகர்புற விளையாட்டுக்களும் , இரண்டு கிராமிய விளையாட்டுக்களும் உள்ளன. கிராமிய விளையாட்டுக்கள் இரண்டை தெரிவு செய்க.

கூடைப்பந்தாட்டம், கிட்டிப்புல், சடுகுடு, உதைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம்.

32 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.

32. ஒரு மனிதனிடம் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும், பத்து ரூபாய் நாணயங்களாகவும் ரூபா.65 உள்ளது. அதில் இருக்கத்தக்க ஐந்து ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 6 3. 7

33. இன்று வெள்ளிக்கிழமை, நாளைய மறுநாள் 12ந் திகதி எனவே சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?

1. 2ந் திகதி 2. 3ம் திகதி 3. 5ந் திகதி

34. ஒரு வாங்கில் நானும் நண்பர்களும் அமர்ந்து இருக்கின்றோம். வலது பக்கத்திலிருந்து எண்ணினால் நான் ஐந்தாவதாகவும் இடது பக்கத்திலிருந்து எண்ணினால் நான் ஏழாவதாகவும் இருக்கின்றேன். நாங்கள் எத்தனை பேர் வாங்கில் அமர்ந்திருக்கின்றோம்?

1. 10 பேர் 2. 11 பேர் 3. 12 பேர்

35 சூரியன் மறையும் வேளை நான் எத்திசை நோக்கிச் சென்றால் எனது நிழல் எனக்கு வலதுபக்கம் விழும்?

1. வடக்கு 2. தெற்கு 3. கிழக்கு

36. சாதாரண வருடம் ஒன்றில் தைமாதம் முதலாம் திகதியிலிருந்து பங்குனி மாதம் 31ந் திகதி வரையிலுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

1. 90 நாட்கள் 2. 91 நாட்கள் 3. 92 நாட்கள்

37. பெருமளவு பாலை சிறிதளவு தண்ணீருக்குள் கலந்தால் பாலின் நிறம் எந்நிறமாக மாறும்?

1. வெள்ளை நிறமாக மாறும்.
2. பாலின் நிறத்தில் மாற்றம் ஏற்படாது.
3. தண்ணீரின் நிறமாக மாறும்.

38. மழை பெய்தால் நனைவோம். மழை பெய்யாவிட்டால்,

1. நனைய மாட்டோம்.
2. குடை பிடித்தால் நனைய மாட்டோம்.
3. நனைவோம்.

39. அதிக மாதிரிப் பரீட்சைகள் செய்தால் அரச பரீட்சையில் சித்தியடையலாம்.

1. இது எப்போதும் உண்மையாகும்.
2. இது பெரும்பாலும் உண்மையாகும்.
3. இது ஒருபோதும் உண்மையானதன்று.

40. பணத்தை சேமித்தால் பணக்காரன் ஆகலாம். பணத்தை சேமிக்காவிட்டால்

1. பிச்சைக்காரன் ஆகலாம். 2. பணக்காரன் ஆகலாம்.
3. அப்படியே இருக்கலாம்.